விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 25 ஸபர் 5 இதழ் 271

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-11-83

# மத்திய அரசு அதிகாரத்தில் திருமலைத் துறைமுகம்

## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

''சகல அபிவிருத்தி சபைகளையும் மாகாண ரீதியில் இணைத்து பிரதேச ரீதியில் அதிகாரத்தை வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவிட்டன. உத்தேச பிரதேச சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றபோதிலும் திருகோணமலைத் துறைமுகம் மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் இருக்கும்.''

இந்தியப் பிரதமரின் சிறப்புத்தூதர் திரு. ஜி. பார்த்தசாரதியுடனான பேச்சுவார்த்தைகள் குறித்து ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகள் ★

# "திட்டங்கள் தயார்; ஜே. ஆர். இந்தியா வந்ததும் இறுதி முடிவு

## சென்னையில் பார்த்தசாரதி

(சென்னை)

''இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் பிராந்திய சபைகளை அமைத்து நிர்வாகத்தை பரவலாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவிட்டன. இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன இம்மாதம் புதுடில்லி வரும்போது இறுதிமுடிவுடன் வருவார்'' என்று பாரதப் பிரதமரின் சிறப்புத்தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி நம்பிக்கை தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## "பழைய இடங்களுக்கு சென்றால் மட்டுமே உதவி"

### அகதிகளுக்கு புதிய 'யோசனை'

(யாழ்ப்பாணம்)

தற்போது வடபகுதி முகாம்களில் உள்ள அகதிகள் தங்களின் பழைய வீடுகளுக்கு சென்றால் மட்டுமே உதவிகள் கிடைக்கும் என்று யாழ். சமூகசேவைப் பதில் ஆணையாளர் திரு. என்.

[8-ம் பக்கம் பார்க்க]

## பழைய இடங்களுக்கு செல்ல மறுப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பண்ணை அகதிகள் முகாமிலுள்ள 299 அகதிகளில் ஒரே ஒருவர் மட்டுமே மீண்டும் பழைய இடத்திற்குச் செல்ல சம்மதம் தெரிவித்துள்ளார். மற்றவர்கள் பழைய

8-ம் பக்கம் பார்க்க)

பொலிஸ் – பொதுமக்கள்

## நல்லுறவுச்சபை மீண்டும் நாளை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் அதிபரின் கீழ் இயங்கும் சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பொதுமக்கள் நல்லுறவுச் சபைகளின் முதலாவது கூட்டம் நாளை சனிக்கிட்மை காலை யாழ் பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

"முகாம்களில் உள்ள நாடற்றவர்

## இந்தியா செல்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை'

### பிரட்மன் அறிவிப்பு

[கா. யோகநாதன்]

அகதிகள் முகாம்களில் உள்ள பிரஜா உரிமையற்ற மலைநாட்டுத் தமிழர்களின் எதிர்காலம் பற்றி கேள்வி எழுந்துள்ளது.

தற்பொழுது முகாம்களில் வாழுகின்ற குடியுரிமை பெறாத நாடற்ற பிரஜைகளுக்கு இந்தியா செல்வதற்கான சாத்தியக் கூறுகள் மிக விரைவில் இல்லையென்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

முகாம்களில் தற்போது சுமார் 3000க்கு மேற்பட்ட நாடற்ற பிரஜைகள் தங்கியுள்ளனர். இவர்கள் தங்கள் பழைய இருப்பிடங்களுக்குச் செல்ல விரும்பவில்லை.

கனகாம்பிகை குள அகதிகள் முகாமில்மட்டும் 50 வீதத்தினர் இந்தியா செல்வதற்குக் காத்திருக்கிறார்கள். இதே போன்று மற்றும் முகாமகளில் நியாயமான அளவு நாடற்ற பிரஜைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள்

## மீண்டும் திரும்புவதில்லை என்று தமிழ் மாணவர் ஒன்றியம் முடிவு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் எக்காரணம்கொண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ம் திகதி பல்கலைக்கழகங்களுககு மீண்டும் திரும்புவதில்லையென்று தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளார். அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''இடம்பெயர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்னைகள் தொடர்பாக ஏற்கனவே தங்களுக்கு விரிவாக விபரித்து எழுதியிருந்தும், நீங்கள் மீண்டும் எம்மைத் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குத் திரும்பும்படி கேட்பது வேதனைக்குள்ளாக்குகிறது.

''எமக்கு இதுவரை ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையும், அது மீண்டும் தொடராது என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லையென்ற காரணத்தாலும் நாம் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு மீண்டும் திரும்புவதில்லை என்ற முடிவில் உறுதியாக நிற்கின்றோம்.

''தாங்கள் 1977ம் ஆண்டு சிங்கள மாணவர்களை யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து தென்னிலங்கை பல்கலைக்கழகத்திற்கு எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாமலேயே

(8ம் பக்கம் பார்க்க)

உ

யாழ். நகரில்

இன்று கோலாகலமான திறப்புவிழா

ஜெயலதா ஜுவலர்ஸ்



11- 11- 83

வெள்ளிக்கிழமை

காலை 8-24 முதல்
9 00 மணிவரை
வரும் சுபவேளையில்

திறப்புவிழா

நடைபெறவிருப்பதால்

அன்பர்கள் - நண்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்



ஜெயலதா ஜுவலர்ஸ்

337, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

(9722)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அத்திவாரம் வெட்டிய கழி மண் இலவசமாக கொடுக்கப்படும். ஸ்ரார் பில்டர்ஸ், 67, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 9813

இருபாலை கோண்டாவில் வீதி, இராச வீதிச் சந்தியில் எட்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வ. சுப்பிரமணியம், 3ம் குறுக்குத்தெரு, தபாற் பெட்டி இல. 50, யாழ்ப்பாணம். 9816

அரியாலை சந்தைக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடியஒன்றரைப் பரப்பு காணி 193, திருமகள் வீதி, அரியாலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. மகேஸ்வரன். 11, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9820

யாழ்ப்பாண மாநகரத்தில், கண்டி வீதிக்கு மிக அண்மையாக மூன்று பரப்புக் காணியிலுள்ள இரண்டாயிரம் சதுர அடி வீடும், இரண்டு அல்லது மூன்று பரப்பாகப் பிரித்து வீடு கட்டக்கூடிய காணிகளும் விற்பனைக்குள்ளன. தரகர்கள் வேண்டாம். தொடர்பு: திருமதி மாணிக்கவாசகர், 857, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 9794

சித்தன்கேணி சந்தியில் இருந்து 50 யார் தொலைவில் பண்டத்தரிப்புக்கு போகும் பிரதான வீதியில் புதிய கிணற்றுடன் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு: பொ.வரதராஜன், மூளாய் ரோட், வட்டுக்கோட்டை. 9760

அரியாலை புகையிரத ஸ்ரேசனுக்கு அருகாமையில்வீடு கட்டுவதற்கு ஏற்ற 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; நா. அமரசிங்கம், 103, புங்கங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 9738

## விற்பனைக்கு

யாழ் மருத்துவக் கல்லூரி அண்மையில் நல்ல சுற்றுடலில் 1½பரப்பு காணியில் நான்கு அறைவீடு விற்பனைக்குண்டு தொடர்பு;- 43, நெல்லியடி ஒழுங்கை (கோணமலை ஒழுங்கை ஊடாக) கொக்குவில் கிழக்கு. தரகர்கள் கவனிக்கப்படமாட்டார்கள். 9763

## தேவை

பெண் காசாளர் ஒருவரும் பெண் உதவியாளர் ஒருவரும் தேவை. வயது 18-25 நற்சான்றிதழ்களுடன் 13-11-83க்கு முன்னர் நேரில் வரவும். மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது சன்லைட் றைக்கிளீனேர்ஸ், பஸ் நிலைய முன்பாக, யாழ்ப்பாணம். 9828

Cast Iron, பித்தளை வார்ப்பு வேலைகளில் அனுபவம் உள்ளவர் நேரில் வரவும். சான்றிதழ்களுடன் T சண்முகலிங்கம், 7/5, பிறவுண் றோட், முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9818

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/-ரூபாவுக்கு மேற்பட்ட பலவிலைகளில் கோழிகளை நேரடியாகவந்து கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ். 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone: -23131. 9764

கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், அரியாலையில் பிரதான வீதியிலிருந்து 200 யார் தொலைவிற்குள் 2½ அல்லது 3 பரப்பு காணி தேவை. விபரத்தை உடன் அறிவிக்கவும். (தரகர்கள் தேவையில்லை). நா. பத்மபாலன், 28, பேரின்ப நாயகம் லேன், சுண்டிக்குளி. 9785

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## காணவில்லை

செல்வரத்தினம் திருவள்ளுவர் எனும் பெயருடைய எனது தேசிய அடையாள அட்டையைக்காணவில்லை. கண்டெடுத்தோருக்கு சன்மானம் வழங்கப்படும். செ. திருவள்ளுவர், 425, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம். 9814

## குத்தகைக்கு

ஸ்ரான்லி வீதியில் கடையொன்று நீண்டகாலக் குத்தகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37, (351, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9796

## வாடகைக்கு

திருமண வைபவங்களுக்கும் மற்றும் விசேஷங்களுக்கும் றிச்சாட் பீரிஸ் கொம்பனித் தயாரிப்பினால் செய்யப்பட்ட இரும்புக்கதிரைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கலா கிறைண்டிங் மில், திருநெல்வேலி சந்தி திருநெல்வேலி அல்லது S. கனகலிங்கம் C/o நாகராஜா மாஸ்ரர் முருகன் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 9664

## கல்வி

வயரிங், மோட்டார் மெக்கானிசம் காலை வகுப்புகள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன. புதிய மாணவர்கள் 14-11-83 சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க: பொறியியல் கல்வி நிலையம்(Engineering Education Centre)யாழ்ப்பாண கல்வி நிலையக் கட்டிடம்,சாந்தி தியேட்டர் அருகாமை, 22, இராமையா செட்டியார்லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S.C இம்மானுவல், B.Sc, (Cey.) Electrical and Automobile Engineer. 9809

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## நவீன சந்தை

Supper Market

DRIVE - IN - MARKET

கடைகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ். கே. கே. எஸ். வீதியிலுள்ள கூட்டுறவுப் பணிமனையின் தொடராக கட்டப்படவுள்ள நவீன சந்தைக் கடைகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.

**நவீன சந்தை விபரம்**

1. நில அறைக் கடைகள் (20 கடைகள்)
2. கீழ்த்தளக் கடைகள் (40 கடைகள்)
3. முதலாம் மாடிக் கடைகள் (40 கடைகள்)
4. இரண்டாம் மாடி மண்டபங்கள்- 8 மண்டபங்கள்.

வாகனங்களில் உள்ளே சென்று - பாதுகாப்பாக எப்பொருளும் வாங்கக் கூடிய நவீனசந்தைக் கடைகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முழு விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை ரூபா 15/- செலுத்தி சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளவும்.

பதில் பொதுமுகாமையாளர்

பன்முகப் பணிமனை,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
9—11—1983.

9801

## சேவை

T. V. அன்ரனா பொருத்திக் கொடுப்பதற்கும், இந்திய அன்ரனா செய்து கொடுப்பதற்கும் நாடுங்கள்: இராமநாதன் கலையரசன். 'சண்முகபதி', ஸ்ரேசன் ரோட், மருதனாமடம். 9802

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி. யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9782

## பனைத்தொழில் - விசேட பயிற்சி

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம், பனை அபிவிருத்திச் சபை, இதர நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் மற்றும் பனைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கு பனைத்தொழில் நிபுணரும் பொதுநல நாடுகளின் ஆலோசகருமான திரு, கே. சம்பந்தம் அவர்களின் தலைமையில், பனம் பொருள் அபிவிருத்திச் சபை மூன்று மாதகால விசேட தொழில் நுணுக்கப் பயிற்சியை யாழ்ப்பாணத்தில் நடாத்தவிருக்கின்றது. 30 வயதுக்கு மேற்படாத ஆண், பெண் இருபாலாரும் 21-11-83-க்கு முன் விண்ணப்பிக்கவும்

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

9831

## பிறந்ததின வாழ்த்து

**மயூரன்**



யாழ்ப்பாணம் 195, சிவன் பண்ணை வீதியைச்சேர்ந்த நல்லநாதன் தம்பதிகளின் செல்வப் புதல்வன் மயூரன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று வெள்ளிக்கிழமை குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்தி, மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் இறைவன் அருளால் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (9821)


## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்

**84 A/L DAY CLASS**

ஆரம்பம் 14-11-83 காலை 7 மணி

குறிப்பு: G. A. Q. கலைப்பட்டப்படிப்பு வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது. மாணவர்கள் முன் கூட்டியே பெயர்களை பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (9826)



சுன்னாகம் இல்லத்தரசிகளுக்கு

## ஓர் நற்செய்தி!

**JANADEN'S**

தரமான

**உருக்குத் தளபாடங்கள்**

காட்சி அறையும் விற்பனை நிலையமும்

இன்று (11-11-83)

காலை 8-30 மணிக்கு

மங்களகரமான

**ஆரம்பவிழா!**

இலங்கை வங்கி (சுன்னாகம் கிளை முகாமையாளர்)

திரு. செ. தவரட்ணம் அவர்கள்

தொடக்கி வைக்கின்றார்

காட்சியறை:
S. P. S. பேணிச்சர் ஹவுஸ்
105A, கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

தொழிற்சாலை:
JANADENS
INDUSTRIES
K. K. S. Road,
Inuvil.

(9823)


## வேலை வாய்ப்புக்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை

1. தச்சுத் தொழிலாளர்கள் (CARPENTERS)
2. இரும்பு வளைப்பவர்கள் (BAR BENDERS)
3. மேசன் (MASONS)
4. தொழிலாளர்கள் (LABOURERS)
5. பாரம் தூக்கி இயக்குனர்கள் (JCB and TOWER CRANE OPERATORS)

**தகைமைகள்:**

(1) குறிப்பிட்ட தொழிலில் இரண்டு வருட அனுபவம்
(2) வயது: 21க்கு மேல்

தங்குமிட, உணவு, மருத்துவ வசதிகள் யாவும் இலவசம்.

சகல சான்றிதழ்களுடன் 12-11-83க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**M. A. HAKEEM**
Janfar Enamelling Works
165, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

(9803)

# றீகன் மீது பிரிட்டிஷ் பெண் வழக்கறிஞர்கள் வழக்குத் தாக்கல்!!

## நியூஸிலாந்தில் அமெரிக்க கடற்படைக் கப்பலை வழிமறித்து ஆர்ப்பாட்டம்!

லண்டன், நவ. 10

அமெரிக்க அதிபர் திரு. றெணல்ட் றீகனுக்கெதிராக பிரிட்டனின் பெண் வழக்கறிஞர்கள் நியுயோர்க் நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளனர்.

பிரிட்டனில் நடுத்தர அணுஆயுத ஏவுகணைகளை அமெரிக்கா இவ்வருடமுடிவில் நிறுத்த முன்வந்துள்ளது. எனவே இந்த முயற்சிக்கு எதிராகவே அமெரிக்க அதிபர் மீது பிரிட்டிஷ் பெண் வழக்கறிஞர்கள் நியுயோர்க்கில் வழக்குத் தாக்கல்செய்யவுள்ளனர்.

இவ்வருட இறுதியில் பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளிலும் அமெரிக்கா அதன் நடுத்தர அணுசக்தி ஏவுகணைகளை நிறுவவுள்ளது. 'நேட்டோ' நாடுகளைப் பாதுகாப்பதே இந்த அணு ஏவுகணைகளை நிறுவுவதன முக்கிய நோக்கமாகும்.

அமெரிக்கா இவ்வாறு ஏவுகணைகளை நிறுவுவதற்குதெரிவு செய்த காலம் நெருங்குவதையிட்டு மேற்குறிப்பிட்ட மூன்று நாடுகளிலும் இந்த அணுஏவுகணைகளை எதிர்த்து பலத்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

### பெண்கள் எதிர்ப்பு

பிரிட்டனில் பெண்கள் பலர் அமெரிக்க இராணுவத்தளங்களின் முன்னல் குளிரையும் பொருட்படுத்தாது ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். ''உயிரைக் கொடுத்தேனும் அணுஆயுத ஏவுகணைகள் நிறுவுவதை தடைசெய்வது'' என்று அவர்கள் உறுதி எடுத்துள்ளனராம்.

இந்த எதிர்ப்புகளின் ஒரு அங்கமாகவே பிரிட்டனின் பெண் வழக்கறிஞர்களும் அமெரிக்க அதிபருக்கெதிராக நியூயோர்க்கில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

### நியூஸிலாந்தில் எதிர்ப்பு

இந்த எதிர்ப்புகளுக்கு நியூஸிலாந்திலும் பெரும் ஆதரவு தெரிவிக்கப்பட்டு வருகிறது. நேற்று அமெரிக்க அணுசக்தி கடற்படைக்கப்பலொன்று நியூஸிலாந்தின் ஆக்லண்ட் துறைமுகம் சென்றது. ஆக்லண்ட் நகரிலுள்ள பொதுமக்களில் சிலர் 30 படகுகளில் சென்று அக்கப்பலைதுறைமுகத்தினுள் புகவிடாது வழிமறித்தனர். இதனல் நியூஸிலாந்து பொலிசாருக்கும் அந்த ஆர்ப்

(7-ம் பக்கம் பார்க்க)

## ரி. வி. யை நிறுத்தியதன் விளைவு கொலையில் முடிந்தது!

லண்டன், நவ. 10

உதைபந்தாட்டமொன்றின் உச்சக்கட்டத்தை தொலைக்காட்சி (ரி.வி.)யில் பார்த்துக் கொண்டிருந்த நபர்ஒருவர் அந்த ரி வி.யை அதன் சொந்தக்காரி திடீரென மூடியதை பொறுக்க முடியாது சமையல் கத்தியினல் அவரைக் குத்திக் கொன்ருர்!

இச்சம்பவம் இங்கிலாந்தின் நோட்டிங்காம் நகரில் இடம்பெற்றது. ஸ்ரான்லி டிங்லி என்ற 46வயது நபரே கொலையாளி. திருமதி கிறிஸ்டின் வோர்லி என்ற 46 வயதுப் பெண்ணே கொலையுண்டவர்.

கொலையாளி ஸ்ரான்லி வேலையற்றவர். சொந்தமாக அவரிடம் ரி. வி. இல்லை. ஆனல் ஒரு அதீத உதைபந்தாட்ட ரசிகன். வழமைபோல் திருமதி வோர்லின் வீட்டுக்கு ரி. வி. பார்க்கச் சென்ருர்.

அப்போது உதைபந்தாட்ட இறுதிப் பந்தயமொன்று ரி. வி. யில் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஸ்ரான்லி அதனை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தார். ஆனல் திருமதி வோர்லி ''இந்நிகழ்ச்சி ரசனையாக இல்லை'' என்று கூறி தமது ரி. வி.யை மூடினராம். இதனைப் பொறுக்க முடியாத ஸ்ரான்லி சமையலறைக் கத்தியொன்றினல் வோர்லியை ஏழு தடவை

(7ம் பக்கம் பார்க்க)

## ''தமிழர் பிரச்னைக்கு வட்டமேசைமகாநாடே தீர்வுஎன்று அன்று ஜி. ஜி. சொன்னதைத்தான் இன்று இந்திய தலைவர்கள் கூறுகிருர்கள்''

### நினைவு தினக் கூட்டத்தில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''இலங்கை தமிழர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாண்பதற்கு வட்டமேசை மாநாடுதான் ஒரேவழி என்று இருபத்தைந்து வருடத்திற்கு முன் அமரர் ஜி ஜி பொன்னம்பலம் கூறினர். இதையே இன்றுதிரு. ஜி. பார்த்தசாரதியும்இந்திய தலைவர்களும்கூறுகிருர்கள் அமரர் ஜி. ஜி. ஒரு தீர்க்க தரிசியாவர்''

அமரர் ஜி, ஜி. பொன்னம்பலத்தின் நினைவுதினக் கூட்டம் தமிழ்காங்கிரஸ் தலைமைக்காரியாலயத்தில், நடந்த போது முன்னள் விரிவுரையாளர் திரு. எஸ். வன்னியசிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. வன்னியசிங்கம் மேலும் கூறியதாவது;

தலைவர் ஜி. ஜி பொன்னம்பலம் எதிர்காலத்தை உணர்ந்தே செயல்பட்டு வந்தார். தமிழ்பகுதிகளின் அபிவிருத்தியில் அதிகஅக்கறைஎடுத்தார், வடக்கிலும், கிழக்கிலும் தொழிற்சாலைகளை அமைத்தார். இன்று அத்தொழிற்சாலைகளில் பலர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

கால்நூற்ருண்டுக்கு மேலாக அவர், தமிழ்மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியிருக்கிருர். தொழிலாளர்களுக்கும் அவர் பெரும் சேவைபுரிந்திருக்கின்ருர்.

### ஒன்றுபட வேண்டும்

முன்னள்யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். ஜேசுதாசன் கூறியதாவது: தமிழ் மக்கள் இன்று தங்களுக்குவழிகாட்டஒரு தலைவன் இல்லாது அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். கட்சிபேதங்களை மறந்து தமிழன் என்ற முறையில் ஒன்றுபட்டு எங்கள் உரிமைகளைப பெறவேண்டும்,

### வழிநடத்த தலைவரில்லை

முன்னள் யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ், மரியாம்பிள்ளை கூறியதாவத: அன்று தலைவர் ஜி ஜி. பொன்னம்பலம் தமிழர் பிரச்னையை தீர்க்க வட்டமேசை மாநாட்டைக்கூட்டுங்கள் என்று கூறிய போது அதனை ஏற்று வட்டமேசை மாநாட்டைக் கூட்டியிருந்தால் ஒரு முடிவு ஏற்பட்டிருக்கும். அன்று அவர் கூறிய யோசனையை இன்று இந்தியத் தலைவர்களும் கூறுகிருர்கள். தமிழ்மக்கள் இன்று தவித்து, தத்தளித்து, திசைதெரியாது திக்குமுக்காடிக் கொண்டிருக்கிருர்கள். வழிநடத்துவதற்கு தலைவர்கள் இல்லாது பலத்த கஷ்டத்தின் மத்தியில்வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். தலைவர் ஜி. ஜி. இன்று இருந்திருந்தால் தமிழ்மக்களை காப்பாற்ற வழி சொல்லியிருப்பார். தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணி செயலாளர் திரு. ஆர். ரி. ஆனந்தராசா கூறியதாவது: தமிழ்த் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, அவர்களுக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## புதுடில்லி பொதுநலவாய மகாநாடு:

# பல்வேறுஉலகப்பிரச்னைகள் விரிவாக ஆராயப்படும்!

புதுடில்லி, நவ. 10

உலக பொருளாதார நெருக்கடிநிலை, படைகுறைப்பு, ஆகியன குறித்து பொது நலவாய நாடுகளின் உச்சிமகாநாட்டில் விரிவாக ஆராயப்படும்' என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் திரு நத்வட்சிங் கூறினர்.

இம்மாதம் 23-ம் திகதி புதுடில்லியில் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் (காமன்வெல்த்) உச்சி மகாநாடு ஆரம்பமாகிறது. இம்மகாநாட்டு விபரங்கள் பற்றித் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டில் கிரனடாவில் அமெரிக்கப் படையெடுப்புப் பற்றிய விடயம் முக்கியமாக ஆராயப்படுமென்றும் இவ்விடயம் ஆராயப்படுவதில் பொதுநலவாய அமைப்பு நாடுகள் பல ஆர்வங்காட்டுகின்றன என்றும் அவர் கூறினர்.

பொதுநலவாய அமைப்பில் 44 நாடுகள் அங்கம் பெறுகின்றன. இவற்றில் 32 நாடுகள் அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்தவை. எனவே கடந்த மார்ச் மாதம் புதுடில்லியில் நிகழ்ந்த 7-வது அணிசேரா உச்சிமகாநாட்டுத் தீர்மானங்கள் பற்றியும் புதுடில்லி உச்சிமகாநாட்டில் ஆராயப்படலாம் என்று கூறப்பட்டது.

பிரிட்டிஷ் மகாராணியார் எலிசெபத தமது கணவர் இளவரசர் எடின்பரோகோமகனுடன் பொதுநலவாய உச்சிமகாநாட்டை ஆரம்பிக்க இம்மாதம் 17-ம் திகதி புதுடில்லி வருகிருர் இவர்களுக்கு இந்திய அரசாங்கம் பெரும் ராஜாங்க வரவேற்பை வழங்கவுள்ளது. பத்துத்தினங்கள் இவர்கள் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்வர். (கி)

### தலைவராக தெரிவு

(புலோலி)

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும் புற்றளைச் சனசமூக நிலையத்தினதும் தலைவராக திரு. அ. இராசரத்தினம் தெரிவு செய்யப்பட்டார். இவ் இளைஞர் கழகத்தினதும் சனசமூக நிலையத்தினதும் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. சோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில் பாவியுங்கள்

''பாயர்'' உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

''சேர்கோப்பூர்''

450 மி. லீ.—55 ரூபா. 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகுகியகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) ''ஹெடோனல் எம். 60%''
450 மி லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) ''ஹெடோனல் எம். 40%''
450 மி. லீ.— 35 ரூபா

(3) ''ஹெடோனல் D. 55%''
250 மி. லீ.—55 ரூபா.

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.

தொலைபேசி : 93563.

## மணிவாக்கு

எவ்வாறு நான் உண்பதற்கும் குடிப்பதற்கும் எனக்கு உரிமை உண்டோ, அவ்வாறே எனது வேலையை நான் விரும்பிய வண்ணம் செய்வதற்கும் எனக்கு உரிமையுண்டு.

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## பேச்சுக்கள் பலனளிக்கவேண்டும்

"இன்றைய உலகில் இந்தியாவில்தான் சமய வாழ்வு உயிருடன் இருப்பதைக் காண்கின்றோம். யேசு நாதரின் மலைப்பிரசங்கம்- 'ஒரு கன்னத்தில் ஒருவன் அடித்தால் மறு கன்னத்தைக்கொடு' என்பதுபோன்ற போதனையை ஒரு தேசிய இயக்கமாக பொதுமக்கள் செயற்படுத்த முடியுமானல் அது இந்தியாவைவிட வேறெந்தநாட்டிலும் இயலாத காரியம்''

இந்நூற்ருண்டு கண்ட சீனப்பேரறிஞரும் தத்துவ மேதையுமான லின்-யு-டாங் (Lin-Yu-Tang) இவ்வாறு கூறியிருக்கிருர்.

40 ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட இந்த உண்மை இன்று அங்கு காண்பதரிது என்று கேலி செய்பவர்கள் இல்லாமலில்லை.

உலக அரங்கை உற்று நோக்கினல் இந்த அடிப்படை உண்மை இந்தியாவின் பொதுவாழ்வில் இன்றும் சுடர்விடுவது வெளிப்படை.

இந்திய சுதந்திரப் போராட்டம் யுத்தத்தால் உருவானதல்ல; சுதந்திர இந்தியா கண்ட யுத்தங்கள் எவையும் வேற்று நாடுகளைத் தாக்கவோ அல்லது தனதாக்கவோ நடைபெறவில்லை. குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறியதும் அக்கணமே யுத்தம் முடிவடைந்திருக்கிறது; உலகில்வேறு எங்கும் இவ்வாறுநடந்ததென வரலாறு கூறவில்லை.

எனவே இன்று இந்தியப் பிரதமர் கூறிவரும் பழைய லட்சியங்கள் - அஹிம்சாமூர்த்தி மகாத்மாகாந்தி புதுப்பித்த லட்சியங்கள் வெறுங் கண்துடைப்பல்ல என்பது உலகறியும்; எங்கள் நாடும் நன்ருயறிய சந்தர்ப்பம் உண்டு.

அந்தலட்சியங்கள்என்ன? எங்கு அநீதி தலையெடுக்கின்றதோ அதற்கெல்லாம் குரல்கொடுக்க வேண்டும். நட்புறவை விரும்பாத பகை நாடுகளுடனும் கூடிய வரை நட்புறவுகளை வளர்த்துக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டவேண்டும்.

மூன்ரும் உலக நாடுகளுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு இன்று மிக அபாயமானது; அது இந்தியப் பிரதமர் தோளில் இருப்பதால் உலகம் ஓரளவிற்கு அமைதியை எதிர்பார்க்கலாம்.

இந்தப் பின்னணியில் இலங்கை விவகாரங்களைச் சீரமைப்பதில் இந்தியா எவ்வித சந்தேகத்திற்கும் உட்படமாட்டாது என்பது எமது நம்பிக்கை.

இந்தியர்களெல்லாம் இந்துக்கள் அல்லது தமிழ் மக்கள் சார்புடையவர்களென்று நினைப்பவர்கள், அவ்வாறு நினைத்து எழுதும் பத்திரிகைகள், தங்கள் அறியாமை எத்துணை தீங்கை விளைக்கவல்லதென்பதை இன்ருவது அறிய வேண்டும். காந்தியின் நான்குமுழ உடுப்பைக் கண்டு அவர் தமிழர் என்று நினைப்பவர் தென்னிலங்கையில் அநேகர்.

உலகத்தை உள்ளங்கையில் வைத்து உறிஞ்சவல்ல அகஸ்தியர் மரபு, பாரத தேசத்தைப் பற்றியவெறும் புளுகல்ல; ராஜதந்திரத்தில், அரசியலமைப்பின் சட்ட நுணுக்கங்களில் திரு பார்த்தசாரதி இந்தியாவின்—மகாத்மா காந்தியின் பெருமதிப்புப்பெற்ற கோபாலசாமி ஐயங்காரின் மகனென்ருல் இலங்கைப் பிணக்கு அவர் அவிழ்க்க இயலாத முடிச்சா?

பேச்சுக்கள் எவ்வாறு போகின்றனவென்பது ரகசியமாளுலும், திட்டித்திரிந்த இந்நாட்டின் பெரும் 'புள்ளிகள்' பத்திரிகைகள் அடங்கியிருப்பதைக் கண்டு நாம் பிரமித்திருக்கின்ருேம்.

இலங்கை ஜனதிபதி, திரு பார்த்தசாரதிக்களித்த இராப்போசனத்தில் கலந்து கொண்ட பிரதமர், மற்றும் அமைச்சர்கள் பிரமுகர்கள் நிச்சயம் இலங்கைக்கும் ஒரு சொந்தப் பார்த்தசாரதி தேவையெனஉணர்ந்திருப்பார்கள்

இலங்கை வானெலி எமது நாடு என்னென்ன விடயங்களில் முன்னணி வகிக்கின்றதென்ற [illegible]வாய்ப்பாட்டை தினமும் சொல்லி வருகின்றது. பாராட்டுக்குரிய விடயங்கள் பல உண்டு. இல்லாததென்ன?

உலகவிவகாரங்களில் மட்டுமல்ல உள்நாட்டிலேயே எவ்வித குழப்பமுமின்றி மக்கள் பாதுகாப்பாக வாழ உழைக்க, நாட்டைக் கட்டியெழுப்ப, இவற்றிற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும் குழப்பக்காரரை வளைத்துப் பிடிக்க எமக்கொரு பார்த்தசாரதி கட்டாயம் வேண்டும்.

விரலுக்கேற்ற வீக்கமாளுலும் எங்கள் 'மேக்' இந்தியாவின் உச்சத்தை எட்டிப்பிடிக்கவேண்டுமென்றில்லை.

இதனை இவ்வாறுநாம்விஸ்தரித்திருப்பதின் காரணம்; இன்று பேச்சுவார்த்தைகளுக்கு மாற்றுப்பானை உண்டா?

பேச்சும் எழுத்தும் எங்கள் ரூபாயைப்போல விலைமதிப்பு இறக்கம் பெற்று வருவதால் வன்செயலே மாற்றுவழியாய்இருக்கிறது. இதனை ஒழிக்கவேண்டும்.

ஒரு சிலரே பயங்கரவாதத்திலோ தீவிரவாதத்திலோ கலவரத்திலோ ஈடுபடுகிறுர்கள் என்பது அர்த்தமற்ற கூற்று; இன்று ஒருநாட்டை அழிக்க அதிகம் பேர்தேவையில்லை; அதிக காலம்தேவையில்லை; அதிநுட்பமான ஆயுதங்கள்; அவற்றில் தேர்ச்சிபெற்ற திறமைசாலிகள்; தகுந்த திட்டம் இம்மூன்றும் இராத பிரச்னைகளைத் 'தீர்க்க' வல்லவை. எனவே பேச்சுக்கள் பலனளிக்கவேண்டும்.

## வெள்ளிச் சிந்தனை

### நல்லாரிணக்கம்

— அருளாளன்

விசுவாமித்திர முனிவருக்குத் தட்சனை கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வசிட்டருக்கு ஏற்பட்டபோது மிகவும் சிறந்த தட்சனை கொடுக்க விரும்பினர். வசிட்டர் நீண்ட யோசனையின்பின் தன்னுடைய சத்சங்க பலனில் காற்பங்கை தட்சனையாகக் கொடுத்தார். ஆனல் வசிட்டரின் செய்கை விசுவாமித்திரருக்குத் திருப்தியளிக்கவில்லை.

எல்லோருக்கும் பொது வானவர்களாக விளங்கும் சூரியன், ஆதிசேடன், வாயு ஆகியோரை தீர்ப்பு வழங்க நியமித்து தன் நியாயத்தை தெரிவிப்பதாக வசிட்டர் கூற விசுவாமித்திரரும் உடன்பட்டு அவர்களை அழைக்கச் சென்ருர். மூவரும் தம் கடமைகளை விட்டுவிட முடியாதென்று மறுத்தனர். உடனே வசிட்டர் விசுவாமித்திரருடனேயே அவர்களிடம் சென்ருர். தன்ஸ்படி மணிமாலையில் தன் தத்சங்க புண்ணியத்தில் காற்பங்கை நிலைக்கச்செய்து சூரியனுக்குப் பதிலாக ஒளி கொடுக்கச் செய்தார். தன் விசிறிலில் காற்பங்கு சத்சங்க பயனை நிலைக்கச்செய்து வாயுதேவனுக்குப்பதிலாக காற்று வீசச் செய்தார். தன் தண்டத்தில் காற்பங்கு சத்சங்க பலனை நிறுத்தி ஆதிசேடனுக்குப் பதிலாகப் பூமியைத் தாங்கச் செய்தார்.

வசிட்டரின் சத்சங்கபவன் செய்யும் செயல்களிலிருந்து தன் பெருமையை உணர்ந்த விசுவாமித்திர முனிவர் வசிட்டர் தனக்கு வழங்கிய தட்சனை பெறுமதி வாய்ந்தது என்பதை உணர்ந்து வசிட்டரை வணங்கித் தான் முன் மறுத்துரைத்ததிற்கு மன்னிப்புக் கேட்டார் என ஒரு வரலாறு உண்டு,

சத்சங்கம் என வடமொழியில் குறிப்பிடப்படும் நல்லாரிணக்கத்தின் பெருமையே இவ் வரலாறு விளக்குகின்றது.

சொல்லொன்று செயல் வேருென்று நினைவு மற்ருென்ருக உள்ளவர்களாய் குறுகிய மனப்பான்மையுடன் வாழ்பவர் அற்பர்களாவர். தான்மட்டும் தன்னை சார்ந்தவர் மட்டும் வாழவேண்டும் என்று கருதாத பரந்த மனப்பான்மையும் உண்மையான நியாயமான அன்பான விடயங்களையே எண்ணியும் சொல்லியும் செயற்படுத்தியும் வாழ்பவர்கள் நல்லோர், பெரியோர் எனப்படுவர்.

கட்குடியருடனும் களவாளியுடனும் சேருபவன் அவர்களைப் போன்றும் கல்வியிலும் செல்வத்திலும் அதிகாரத்திலும் சிறப்படைந்தவர்களைச் சேர்ந்தவர்கள் அவர்களைச் போன்றும் விளங்குவதைப் போன்று நற்பண்புமிக்க சேர்க்கை நற்பண்பையே அதிகரிக்கச் செய்யும்.

நல்லாரிணக்கம் சாதாரண மக்களை மேன்மையடையச் செய்வது மட்டுமன்றி மேன் மக்களுக்கும்கூட பெருமையையும் இன்பத்தையும் கொடுக்கும். ஆதலால் தினமுமே நல்லோர்களுடன் தொடர்புவைத்திருக்க வேண்டும் என வலியுறுத்துவர். நீண்டதூரம் கடந்து நல்லோர்களைத் தேடி அவர்களுடன் தொடர்புகளை வளர்த்துக்கொள்ள முடியாதவர்கள் பெரியோர்கள் இயற்றிய நூல்களைப் படித்தால் அவர்களுடன் பழகுவது போன்றிருக்கும் என்பர், உதாரணமாக திருக்குறளையும் திருநாவுக்கரசர் தேவாரத்தையும் கற்பது திருவள்ளுவருடனும், திருநாவுக்கரசருடனும் பழகுவதற்கு சமமாக இருக்கும் என்பர்.

மூன்ரும் வயதிலேயே சிவஞானப்பால் அருந்திய சம்பந்தசுவாமிகளே அடியார் கூட்டமாகிய நல்லார் இணக்கத்தால் மகிழ்ந்தார் என்ருல் நல்லார் இணக்கம் எத்தகைய மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதைஊகிக்கலாம்.

விட்டொழிந்தன
நம்முடை வல்வினை
விரிகடல் வருநஞ்சம்
உண்டிறைந்த
வானவர்தமைத் தாங்கிய
இறைவனை உலகத்தில்
வண்டுவார்குழல்
மங்கையொர் பங்கனை
வலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன் மெய்த்
தொழில்புரி
தொண்டரோடினி
திருந்தமையாலே.

— திருஞானசம்பந்தர்

# சைவசமயத் தீட்சையின் அவசியம்

(ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமையாகிய இன்று (11-11-83) முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கரணவாய் ஸ்ரீமத் கை. திருஞானசம்பந்த குருக்கள் அவர்களால் நடாத்திவைக்கப்படும் சமய தீட்சை விசேட நிகழ்ச்சியை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

சிவத்தை வணங்குவோர் எல்லோரும் சைவர் ஆயினும் சமய தீட்சை பெற்ற பின்பே அவர்கள் உண்மைச் சைவர்கள் ஆகின்ருர்கள். சைவக்குடும்பத்தில் பிறந்துவிட்டதிளுல் சைவளுகி விடமுடியாது. சைவக் குடும்பத்தில் பிறந்தவர்கள் சைவ சமய தீட்சை பெறத் தகுதி உடையவர்களே தவிர உண்மைச் சைவரககிவிட முடியாது. காசுத் தாளுக்கு அரசாங்க முத்திரை இலலாவிடில் அது வெறுந் தாளே! அதே போன்று சமயதீட்டை பெருதோர் உண்மைச் சைவராகி விடமுடியாது. அவர் பேரளவில் மாத்திரம்தான் சைவர்.

சைவசமய தீட்சை பெற்றுக்கொண்டவர்களே எந்தக் கிரியைகளையும் செய்தற்கு உரியர்; வேத சிவாகமங்கள் திருமுறைகளை ஓதி உணர்தற்கு உரியர். சமய தீட்டை பெறுவதன் நோக்கம் மிருகத்தன்மையை ஒழித்து மனிதத்தன்மையை அடக்கி தெய்வத் தன்மையை ஒளிவீசச் செய்தலாம்.

மந்திரங்கள் நூல்களிலே கூறப்பட்டிருந்தாலும் ஆசாரியார் வாயிலாக உபதேசமாகப் பெறும்போதுதான் அது உண்மையான சக்தியைப் பெறுகின்றது, குரு வெறும் மந்திரத்தை மாத்திரம் உபதேசிக்கவில்லை. மந்திரத்தோடு தம்மிடமுள்ள சைதன்ய சக்தியையும் சேர்த்துக் கொடுக்கிருர். அதனுல்தான் குருமுகமாக உபதேசம் பெறுவதற்குச் சக்தி உண்டென்று கூறப்படுகின்றது.

செம்போடு களிம்பு அநாதியே சேர்ந்திருப்பது போலவே உயிர்களோடு ஆணவமலமும் அநாதியே சேர்ந்திருப்பது. செம்பை ஒரு நாளைக்குத் தேய்த்து விளக்காவிட்டாலும் அது களிம்பு பிடித்து உபயோகப் படுத்த முடியாத பாத்திரமாகி விடும். அதுபோலவே ஆணவமும் தினமும் அணு அணுவாகத் தேய்க்கப்படவேண்டியதாகும். சைவ சமய தீட்சை பெற்றுக்கொண்டவர்களே தினமும் சமய அநுட்டானம் செய்ய முடியும். தினமும் சமய அநுட்டானம் செய்பவரே ஆணவமலத்தைத் தேய்க்க முடியும், தினமும் செம்பை விளக்குவது போல தினமும் பிரார்த்தனையினுல், சமய அநுட்டானத்திளுல் ஆணவத்தைத் தேய்க்க வேண்டும்.

நா. முத்தையா


(ஆசிரியர்: ஆத்மஜோதி)

மரணக்கிரியைகளின் போது வீடுகளுக்குச் சைவக்குருமார் அழைக்கப்படுகின்ருர்கள். தீட்சை பெற்ற ஒருவருக்குத்தான் மரணக்கிரியை செய்யும் உரிமை அவருக்கு உண்டு. தந்தை தீட்சை பெருதவரீ எனவே மகனும் தீட்சை பெற்றிருக்க நியாயம் இல்லை. தீட்சை பெருத ஒருவர் இறந்தால் மரணக்கிரியின்போது தீட்சை வைத்தே மற்றக்கிரியைகள் ஆரம்பிக்கப் படுகின்றன. இறந்தபின் தீட்சை வைப்பதென்பது பட்ட மரத்திற்கு தண்ணீர் ஊற்றுவது போன்றதொரு செயலாகும். இறந்த தந்தைக்கோ தாய்க்கோ கிரியைகள் செய்பவர்களும் தவருது சமயதீட்சை பெற்றேயாகவேண்டும். இல்லையேல் அவர்கள் கிரியைகள்

(8-ம் பக்கம் பார்க்க)

வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்களுக்கு:-
த மனுன்ஸ்கம்பனி
லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680
பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# வயது 7, வளர்ச்சி தொடர்கிறது!




7, ஆண்டுகளுக்கு முன்னர், மகாராஜா முதலீட்டு நிறுவனத்தின் உதயம் துணிகரமான சாதனையொன்று, ஏனெனில் 77ம் ஆண்டுத் தேர்தலுக்குமுன் இலங்கையில் நிலையற்ற பொருளாதார, அரசியல் நிலைப்பாடே நிலவியது.

நமக்குக் காலத்தின் மீது நம்பிக்கையிருந்தது, அந்நம்பிக்கை நன்மை தந்திருக்கிறது. ஏனெனில் நாமே சொல்லிக்கொண்டாலும், இன்றுவரையான நமது வளர்ச்சி அசாத்திய வியப்புக்குரியது. இக்குறுகிய 7 வருட காலத்துள் இந்நாட்டின் மிகப்பெரிய, ஸ்திரமான, நிதி நிறுவனங்களிலொன்றாக வளர்ந்திருக்கிறோம் (ஏப்பிரல் 77 லிருந்து இன்றுவரையான எமது வளர்ச்சி 300 மடங்காகும், அதன் பலனே 13.6 கோடி ரூபாய் வைப்புப்பணமாகும்)

காலத்தின்மீது நாம் கொண்ட நம்பிக்கை வீண்போகவில்லை! இன்றும் மகாராஜா முதலீட்டு நிறுவனம் முன்னரைப் போன்ற ஸ்திரப்பாட்டுடனேயே திகழ்கிறது.

வெகு விரைவில், வைப்புச்சான்றிதழ்,வீடமைப்பு நிதியுதவி, சிறப்பான வர்த்தக வங்கிச்சேவை, பாரிய சொத்து அபிவிருத்தித் திட்டம் போன்ற புதிய மேலதிக திட்டங்களையும் அறிமுகம் செய்யவிருக்கிறோம்.

## உங்கள் பணத்தை விவேகமாகவும், விஸ்திரமாகவும் பெருகச் செய்கிறோம்.


எமது முதலீட்டாளர்களின் பணத்தை வெகு கவனமாக முதலீடு செய்கிறோமென்ற நம்பிக்கையே நம் காரிய சித்திக்கான முக்கிய காரணங்களிலொன்றாகும்.

அபிவிருத்தித் திட்டத்திலிருந்து சுற்றுலாத்துறைவரை, இயந்திர இறக்குமதியிலிருந்து போக்குவரத்துத்துறையீறாக, நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெரிதும், சிறிதுமான நூற்றுக் கணக்கான வியாபாரத்துறைகளில் நாம் முதலீடு செய்கிறோம்.

எனவே எமது முதலீட்டாளர்களின் பணம் வளர்ச்சிமிகு வர்த்தகத் துறைகளிலேயே முதலீடு செய்யப்படுகிறது என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம், சுருங்கக் கூறின் உங்கள் பணம் ஓரிடத்தில் முடங்கியிருக்காது பல துறைகளில் முதலீடுசெய்யப்படுகிறது.

கடந்தகாலத்தைப் பெருமையோடு இன்று திரும்பிப்பார்க்கும் அதேவேளை வருங்காலத்திலும் தொடரும் வளர்ச்சி, வளமான சகாப்தத்தை உருவாக்கும் என்பதில், எதிர்காலமீதும் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

## உங்கள் வைப்புக்களை எவ்வாறு மீள முதலீடு செய்கிறோம்.




# மகாராஜா முதலீட்டு நிறுவனம்

கூட்டிணைக்கப்பட்டது 23.9.76. தலைமை அலுவலகம் : 347, யூனியன் பிளேஸ் கொழும்பு 2. தொலைபேசி 29747/34133/23130
பதிவு அலுவலகம்: 54, பாங்ஷால் வீதி கொழும்பு 11. கிளை அலுவலகம்; 122, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 021-24267

முக்கிய வியாபாரத் துறைகள் :
